முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1594

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.02.2024**, வெள்ளிக்கிழமை

1. பிரம்மத்தின் மகா சூட்சுமமே
   பிரணவத்தின் அதிமகா சக்தியே
   சரவணச்சுடரேற்றி இந்த பேருலகில்
   சற்குருவாய் அற்புதம் நடத்துகின்ற மாதவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
   தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
   அவனியில் ஞான அறிவுரை ஆசி அரங்கன் உமக்கு
   (சோபகிருது வருடம் தை மாதம் 26 ம் நாள், 09.02.2024, வெள்ளிக்கிழமை)
   இன்னும் ஆற்றல்கூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே மாதவசி உன் தர்ம வழிகள்தான்
   உலகை காத்து வருகுதப்பா
   குறைவின்றி நீ தருகின்ற மறைபோன்ற உபதேசங்கள்தான்
   மக்களையெல்லாம் ஞானிகளாக்கப் போகுதப்பா
4. அப்பனே அன்னதனால் அரங்கன் உன் ஞானம் பயில
   அகிலத்தில் பிரணவக்குடில் நோக்கி உலகோர்
   காப்பாய் என வேண்டி ஓங்காரக்குடிலுக்கு வர
   கருணைகொண்டு அவர்களுக்கெல்லாம்
5. அரங்கன் உமக்காய் கந்தவேலன்
   இறங்கி ஆசியும் அனுகூலமும்
   ஆற்றல்மிக்க தீட்சை பலமாக
   அற்புதம் பல நடத்திக் காக்கின்றேன்
6. ஆகவே உலகோர் ஆறுமுகன் என்
   பேராற்றல் மகா சக்திதனை அடைய
   அறுபடை வீடு பிரயாணிப்பதுபோலே
   பிசகின்றி பிரணவக்குடிலான ஏழாம்படை வீடு

7. ஓங்காரக்குடிலுக்கு வந்து சென்றால்
வருவோர்க்கு அரங்கன் வழி
என் ஞானம் சித்திக்க நேரும்
வல்லமை கொண்டு அரங்கன் செய்கின்ற தர்மத்தை ஏற்றால்
8. வழுத்திடுவேன் இந்த பேருலகில்
வருவோரெல்லாம் ஞானிகளாகி
ஆகியே ஞானலோகம் படைக்க உண்டான
அற்புதம் கலியில் கனியும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–